இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

# 1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேசிய அருங்கலைகள் பேரவையும் அதை மருவிய நிறுவனங்களும் சட்டம்

[1982, ஒத்தோபர் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1982, ஒத்தோபர் மாதம் 15 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 2.00 தபாற் செலவு : ரூபா 1.50

# 1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேசிய அருங்கலைகள் பேரவையும் அதை மருவிய நிறுவனங்களும் சட்டம்

[1982, ஒத்தோபர் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஒ. 68/80
1419

பாரம்பரிய கைப்பணிகள் உட்பட கைப்பணிகளை மேம்படுத்தும், அபிவிருத்திசெய்யும், வளர்க்கும் நோக்கத்திற்காகவும், அவற்றின் தரத்தினை சீராக்கும் நோக்கத்திற்காகவும் தேசிய அருங்கலைகள் பேரவையையும், அருங்கலைகள் பேரவைகளையும், இலங்கைக் கைப்பணிகள் சபையையும், தேசிய வடிவமைப்பு நிலையத்தையும் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்குவரும் தேதியும்.

1. இச்சட்டம், 1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேசிய அருங்கலைகள் பேரவையும் அதை மருவிய நிறுவனங்களும் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் காலத்திற்குக் காலம் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். இச்சட்டத்தின் வெவ்வேறு பாகங்கள் நடைமுறைக்கு வருவதற்கென வெவ்வேறு தேதிகள் அமைச்சரினால் நியமிக்கப்படலாம்.

## பாகம் I

தேசிய அருங்கலைகள் பேரவையைத் தாபித்தல்.

2. (1) இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "பேரவை" எனக் குறிப்பிடு செய்யப்படும் தேசிய அருங்கலைகள் பேரவையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறுவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அது அத்தகைய பெயரில் வழக்குத் தொடரலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

பேரவையின் அமைப்பு.

3. (1) பேரவையானது, அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டிய பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(i) இருபத்தைந்தாம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அருங்கலைகள் பேரவைகளை அல்லது ஏதேனும் அருங்கலையை அல்லது எவையேனும் அருங்கலைகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென, ஐந்துக்கு மேற்படாத மொத்த எண்ணிக்கையினரான ஆட்கள் ;

(ii) அமைச்சரின் அபிப்பிராயப்படி, பேரவையின் வேலை தொடர்பாகச் சிறப்பாகத் தகைமை பெற்றுள்ளவர்களான மூன்று ஆட்கள் ;

(iii) கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அச் செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அவரது பிரதிநிதி ;

(iv) வியாபாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினல் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஆளொருவர் ;

(v) பண்பாட்டலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினல் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஆளொருவர் ;

(vi) இலங்கைக் கைப்பணிகள் சபையின் தவிசாளர் ;

(vii) தேசிய வடிவமைப்பு நிலையத்தின் தவிசாளர் ;

(viii) சிறுகைத்தொழில்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ; அத்துடன்

(ix) அறிவியல், கைத்தொழில் ஆராய்ச்சிக்கான இலங்கை நிறுவகத்தின் பணிப்பாளர் அல்லது பணிப்பாளரினல் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவரது பிரதிநிதி.

(2) அமைச்சரானவர், உறுப்பினர்களுள் ஒருவரைப் பேரவையின் தவிசாளராக இருப்பதற்கென நியமித்தல் வேண்டும்.

உறுப்பாண்மைக்கு நியமிக்கப்பட முடியாமற்செய்யும் தகைமையீனம்.

4. ஆளொருவர்,—

(அ) பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஒருவராக அவர் இருப்பின் அல்லது வரின் ; அல்லது

(ஆ) பேரவையின் உறுப்பினர் ஒருவர் என்ற வகையில் தமது பணிகளை நிறைவேற்றுவதைப் பங்கமான முறையில் பாதிக்கக்கூடிய சாத்தியம் கொண்ட அத்தகைய ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையை அவர் கொண்டிருப்பின்,

பேரவையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது அவ்வாறு தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்.

பேரவையின் உறுப்பினர்களின் பதவிக் காலம்.

5. (1) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பினல், பதவிவிலகுவதனல், அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனல் முன்னராகவே பதவியை வறிதாக்கினலன்றி, மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், மீள்நியமனத்திற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(2) பேரவையின் உறுப்பினர் எவரும் இறக்கும் அல்லது பதவியை வறிதாக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது அவர் பதவியிலிருந்து அகற்றப்படும் சந்தர்ப்பத்தில், 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்டாற்போன்று அதேமுறையில் வேறோர் ஆளை அமைச்சர் நியமிக்கலாம். அத்தகைய உறுப்பினரின் இடத்தில் நியமிக்கப்பட்ட ஆளெவரும், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ, அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(3) பேரவையின் உறுப்பினர் எவரும் ஏதேனும் காலப்பகுதியின்போது சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாக தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்டாற்போன்று அதேமுறையில் வேறோராளை அத்தகைய காலப்பகுதியின்போது அவரது இடத்திற் செயலாற்றவென அமைச்சர் நியமிக்கலாம்.

6. (1) பேரவையின் இலச்சினையானது, பேரவையின் பாதுகாப்பிலிருத்தல் வேண்டும். பேரவையின் இலச்சினை.

(2) பேரவையின் இலச்சினையானது, பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) பேரவையின் இலச்சினையானது, பேரவையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படலாகாது; அவர்கள் இருவரும் தாம் சமுகமாயிருந்ததற்குச் சான்றாக சாதனத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

7. (1) அமைச்சரானவர், 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவையின் உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து அகற்றுவது உசிதமானதென அவர் கருதின், அதற்கென காரணங்கள் காட்டாது அவரை அவ்வாறு பதவியிலிருந்தகற்றலாம். பேரவையின் உறுப்பினர்களைப் பதவியிலிருந்து அகற்றல்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றுகையானது நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

8. பேரவையின் உறுப்பினர் எவரும், தான் பதவியிலிருந்து விலகுவதாக எழுதி அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின்மூலம் எந்நேரத்திலேனும் பதவியிலிருந்து விலகலாம். பேரவையின் உறுப்பினர்கள் பதவிவிலகல்.

9. பேரவையின் உறுப்பினர்களுக்கு ஊதியம் எதுவும் செலுத்தப்படுதலாகாது. ஆனால் பேரவையின் கூட்டங்களுக்குச் சமுகமளிக்கும் நோக்கத்திற்காக அல்லது பேரவையின் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட அத்தகைய வேறு நோக்கத்திற்காக அவர்கள் உறக்கூடியவாறான அத்தகைய பிரயாண, ஒட்டல் செலவுகளும் இடைநேர்வினவான செலவுகளும் பேரவையினால் மீளளிக்கப்படுதல் வேண்டும். பேரவையின் உறுப்பினர்களின் செலவுகளை மீளளித்தல்.

10. (1) பேரவையானது ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும். பேரவையின் கூட்டங்கள்.

(2) பேரவையின் தவிசாளர், சமுகமாயிருப்பின், பேரவையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர் வருகை தராவிடின் சமுகமாயுள்ள உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்கவென உறுப்பினர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(3) இப்பாகத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைவாக, பேரவையின் கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பாகப் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையானது விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

11. பேரவையில் ஏதேனும் வெற்றிடம் இருக்கும் காரணத்தினால் மட்டும் அல்லது பேரவையின் எவரேனும் உறுப்பினர்களின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கும் காரணத்தினால் மட்டும் பேரவையின் செயல் அல்லது முடிபு எதுவும் அல்லது நடவடிக்கைகள் எவையும் செல்லுபடியற்றதாக அல்லது செல்லுபடியற்றனவாகக் கருதப்படுதலாகாது. வெற்றிடம் காரணமாக அல்லது உறுப்பினர்களின் நியமனத்திலுள்ள குறைபாடு காரணமாக செயல்கள் செல்லுபடியற்றனவாதலாகாது.

நிலையியற் குழுக்கள்.

12. (1) பேரவையின் விதப்புரையின்மேல், அமைச்சர், பேரவையானது அதனது பணிகளைப் புரிவதில் அதற்கு உதவுவதற்கு அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய நிலையியற் குழுக்களை நியமிக்கலாம் என்பதுடன், அத்தகைய குழுக்களின் உறுப்பினர்களாக இருப்பதற்குத் தகுதியானவரென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய ஆட்களை, அவர்கள் பேரவையுடன் தொடர்புடையவர்களாயிருப்பினுஞ்சரி இல்லாவிடினுஞ்சரி, நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நிலையியற் குழுவொன்றின் உறுப்பினர்களுள் ஒருவரை அத்தகைய குழுவின் தவிசாளராக இருப்பதற்கென அமைச்சர் நியமித்தல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட தவிசாளர் அத்தகைய குழுவின் கூட்டுநராகவிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிலையியற் குழு ஒவ்வொன்றும் அத்தகைய குழுவின் கூட்டங்களுக்கான கூட்டநடப்பெண்ணைத் தீர்மானித்தல் வேண்டும்.

(4) அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையானது விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

தத்துவங்களைக் கையளித்தல்.

13. (1) பேரவையானது, அதனது தத்துவங்களிலும் பணிகளிலும் எவற்றையேனும் நிலையியற் குழுவொன்றிற்குக் கையளிக்கலாம்.

(2) நிலையியற் குழுவொன்று, பேரவையின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளுக்கு அமைய, அதற்குக் கையளிக்கப்பட்டவாறான தத்துவங்களையும் பணிகளையும், பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்.

பேரவையின் செயலாளர்.

14. பேரவையானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன் தகுதிவாய்ந்தவரும் அனுபவம் உள்ளவருமான ஆளொருவரை அத்தகைய பேரவையின் செயலாளராக நியமித்தல் வேண்டும்.

பணியாட்டொகுதியினர் தொடர்பாகப் பேரவையின் தத்துவங்கள்.

15. இப்பாகத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைவாகப் பேரவையானது,—

(அ) பேரவையின் பணியாட்டொகுதியினரை நியமிக்கலாம், நீக்கலாம் அத்துடன் அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம்;

(ஆ) பணியாட்டொகுதியினரின் கூலிகளை அல்லது சம்பளங்களை அல்லது ஏனைய ஊதியத்தை நிர்ணயிக்கலாம்;

(இ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் சேவை நியதிகளையும் நிபந்தனைகளையும் தீர்மானிக்கலாம்; அத்துடன்

(ஈ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் நலனுக்காக சகாய நிதியம் ஒன்றையும் திட்டங்களையும் தாபித்து ஒழுங்குபடுத்தலாமென்பதுடன், அத்தகைய நிதியத்திற்கு அல்லது திட்டங்களுக்கு உதவுதொகைகள் அளிக்கலாம்.

பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்கள் முதலியோரை நியமித்தல்.

16. (1) பேரவையின் வேண்டுகோளின் பேரில் பகிரங்கசேவையிலுள்ள அலுவலர் எவரும் அந்த அலுவலரின் சம்மதத்துடனும் அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினது சம்மதத்துடனும், அதேபோன்ற சம்மதத்துடன் பேர

வையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் பேரவையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவை புரிவதற்கு உடன்பட்டுள்ள ஆளெவரையும் பேரவை ஊழியத்திலமர்த்துமிடத்து, அவ்வாளினால் பேரவைக்கு ஆற்றப்படும் சேவைக் காலப்பகுதி எதுவும், அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்காற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) பேரவையின் வேண்டுகோளின் பேரில், உள்ளூராட்சிச் சேவையின் உறுப்பினர் எவரும் அல்லது உள்ளூரதிகாரசபையொன்றின் அலுவலர் எவரும் அல்லது சேவையாளர் எவரும், விடயத்திற்கேற்றாற்போன்று அத்தகைய உறுப்பினரின், அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்துடனும் உள்ளூராட்சிச்சேவை ஆலோசனைச்சபையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் சம்மதத்துடனும், அதேபோன்ற சம்மதத்துடன் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம். அல்லது பேரவையும் உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச்சபையும் அல்லது அந்த உள்ளூரதிகாரசபையும் உடன்பட்டுக்கொள்ளக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மீதும் நிபந்தனைகளின்மீதும் (ஓய்வூதிய உரிமைகள், சகாய நிதிய உரிமைகள் தொடர்பான நியதி நிபந்தனைகள் உட்பட அதேபோன்ற சம்மதத்தோடு அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) பேரவையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் அலுவலர் எவரும் அல்லது சேவையாளர் எவரும், அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் அத்துடன் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினதும் சம்மதத்துடனும், அதேபோன்ற சம்மதத்துடன் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது பேரவையும் சொல்லப்பட்ட பகிரங்கக் கூட்டுத்தாபனமும் உடன்பட்டுக் கொள்ளக்கூடியவாறான அத்தகைய நியதிகளின் மீதும், நிபந்தனைகளின் மீதும் (ஓய்வூதிய உரிமைகள் அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பான நியதி நிபந்தனைகள் உட்பட) அதேபோன்ற சம்மதத்தோடு அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(7) உட்பிரிவுகள் (5) ஐயும், (6) ஐயும் பின்பற்றிப் பேரவையின் பணியாட்டொகுதிக்கு ஆளெவரும் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய பணியாட்டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினரைப்போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

**பேரவையின் தத்துவங்களும் பணிகளும்.**

17. பேரவையின் தத்துவங்களும் பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) இலங்கையிலும் வெளிநாட்டிலும் கண்காட்சிகள் நடாத்துதல்;

(ஆ) கைப்பணிகளினதும் மெருகூட்டப்பட்ட உற்பத்திப் பொருட்களினதும் உற்பத்திற்குப் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்களின் தரத்தைச் சீராக்குதல்;

(இ) கைப்பணிகளின் கற்கைக்காக பரிசில்களையும் பதக்கங்களையும் புலமைப்பரிசில்களையும் நிறுவுதலும் வழங்குதலும்;

(ஈ) அருங்கலைகள் பேரவைகளுக்கு அல்லது வடிவமைப்புகள் தயாரிப்பதில் அல்லது கைப்பணிகளை விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள வேறு நிறுவனங்களுக்கு அல்லது ஒழுங்கமைப்புகளுக்கு, அமைச்சரின் அங்கீகாரத்துடன் நிதிசாருதவிக்கும் வேறு ஏதேனும் உதவிக்கும் ஏற்பாடுசெய்தல்;

(உ) அருங்கலையாக்குநரின் பயிற்சிக்கு ஏற்பாடுசெய்தலும் அருங்கலையாக்குநரோடு தொடர்புபட்ட பயிற்சி நிறுவனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அருங்கலையாக்குநர், தொழில் பயிலுநர் மற்றும் ஊழியர் ஆகியோரது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் எல்லாவற்றின்மீதும் ஆலோசனையளித்தலும்;

(ஊ) அருங்கலையாக்குநரின் நலனுக்காய திட்டங்களை நிறுவுதல்;

(எ) அருங்கலையாக்குநருக்கான சருவதேச மாற்று நிகழ்ச்சித் திட்டங்களை நிறுவுதல்;

(ஏ) அருங்கலையாக்குநரின் தராதரங்களையும் திறமைகளையும் சீர்திருத்துவதற்காக பாரம்பரிய மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் சருவதேச மட்டத்திலும் வேலைக்களங்களையும் கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் ஒழுங்குபடுத்துதல்;

(ஐ) அருங்கலைகள் தொடர்பிலான தகவலையும் அறிவையும் பரப்புவதற்கு ஏற்பாடு செய்தல்; அத்துடன்

(ஒ) பாரம்பரிய, தேசிய அல்லது பண்பாட்டுப் பெறுமதியுடைய கைப்பணிகளைப் பேணிக்காப்பதன்மீது ஆலோசனை அளித்தலும், அத்தகைய கைப்பணிப் பொருட்களைப் பேணிக்காக்கும் நோக்கத்துக்காக அருங்கலைகள் நூதனசாலைகளை அல்லது பார்வைக்கூடங்களைத் தாபித்தல்.

பேரவையின் நிதியம்.

18. (1) பேரவையானது அதனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். பேரவையின் நிதியத்திற்குள் பின்வருவன வரவு வைக்கப்படுதல் வேண்டும் :—

(அ) பேரவையின் பயன்பாட்டிற்கென பாராளுமன்றத்தினால் காலத்திற்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவையான பணத்தொகைகள் யாவும்;

(ஆ) இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள எத்தகையதுமான மூலமெதனிலுமிருந்து நன்கொடைகள் வழியாக, கொடைகள் வழியாக அல்லது மானியக்கொடைகள் வழியாகப் பேரவையினால் பெற்றுக்கொள்ளப்படக்கூடியவையான பணத்தொகைகள் யாவும்;

(இ) ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தினால், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது வேறு நிறுவனத்தினால் சட்டத்திற்கிணங்க பேரவைக்குக் கைமாற்றப்படக்கூடியவையான பணத்தொகைகள் யாவும்; அத்துடன்

(ஈ) கைப்பணிகளின் ஏற்றுமதிமீது இப்பாகத்தின்கீழ் சுமத்தப்பட்ட எல்லா ஆயவரிகளினதும் வருமதிகள்.

(2) பேரவையானது அதனது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கையிலும், புரிகையிலும், நிறைவேற்றுகையிலும் அதனால் உறப்பட்ட செலவினம் எதனையும் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படக்கூடியவையான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் பேரவையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கைப்பணிகளின் ஏற்றுமதிமீது ஆயவரி அறவிடுதல்.

19. (1) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடனும் வியாபாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடனும் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில், ஆயவரியொன்று அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கைப்பணிகளின் ஏற்றுமதி மீது விதிக்கப்படுதலும், அறவிடப்படுதலும், செலுத்தப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சுமத்தப்பட்ட ஆயவரியின் தொகை அதையொத்த கட்டளையொன்றினால் மாற்றப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) இப்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டுமென்பதுடன், அது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள் அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதலும் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய கட்டளை எதுவும், அதன்கீழ் முன்னதாகவே செய்யப்பட்ட எதனதும் செல்லுபடிக்குப் பங்கமின்றி, அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் பாகமாக அமைந்தாற்போன்று இப்பிரிவு பயனுறுதல் வேண்டும் என்பதுடன், அக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் அறவிடப்பட்ட ஆயவரியின் வருமதிகள் பிரதான சுங்கச் சேகரிப்பாளரினால் மாதந்தோறும் பேரவையின் நிதியத்தின் வரவுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் சுமத்தப்பட்ட ஆயவரியானது ஏதேனும் ஏற்றுமதித் தீர்வையுடன் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின்கீழ் அறவிடப்படும் வேறேதேனும் ஆயவரியுடன் மேலதிகமானதாகவிருத்தல் வேண்டும்.

*பேரவையின் நிதியாண்டும் அதன் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலும்.*

20. (1) பேரவையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) பேரவையின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய செவ்வையான கணக்குப் புத்தகங்களை பேரவை வைத்திருக்கச்செய்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வது தொடர்பான, அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் பேரவையின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*பேரவையின் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.*

21. பேரவையின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் பேரவையானது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.*

22. பேரவையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*விவரத் திரட்டுக்களும் தகவலும்.*

23. (1) பேரவையானது, இப்பாகத்தின்கீழான அதன் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பனவற்றுள் எதனையும் பிரயோகிக்கவும், புரியவும், நிறைவேற்றவும் அதனை இயலச்செய்யும் நோக்கத்துக்காக, பேரவை அல்லது பேரவையினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், எழுத்திலான அறிவித்தல்மூலம், அறிவித்தலிற் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய எல்லா விவரத்திரட்டுக்களையும், தகவலையும் பேரவைக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குக் கொடுத்துதவுமாறு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராமுட்பிரிவின்கீழான அறிவித்தல் ஒன்றின்மூலம் ஏதேனும் விவரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் ஆளுக்கு, ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய விவரத்திரட்டைத் தயாரிப்பதிலிருந்து அல்லது அத்தகைய தகவலைக் கொடுப்பதிலிருந்து அத்தகைய ஆள் தவிர்க்கப்பட்டிருக்குமிடத்துத்

தவிர, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலத்துக்குள்ளாக அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கி ஒழுகுதல் கடமையாதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

24. (1) விதித்துரைக்கப்படுவதற்கு இப்பாகத்தினால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பாக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியான அளவு விரைவாக, அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எதுவும் எந்தத் தேதியன்று நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அந்தத் தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

## பாகம் II

அருங்கலைகள் பேரவைகளின் அமைப்பு.

25. (1) அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அக்கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியதான அருங்கலையொன்று தொடர்பாக அல்லது அருங்கலைகளின் தொகுதியொன்று தொடர்பாக, இதனகத்துப்பின்னர் "ஒரு பேரவை" எனக்குறிப்பீடு செய்யப்படும் ஒரு அல்லது அதற்கு மேற்பட்ட அருங்கலைகள் பேரவையை அல்லது பேரவைகளை நியமிக்கலாம்.

(2) கைப்பணிகள் துறையில் அனுபவமும் அறிவும் பெற்றுள்ளவர்களான ஆட்களிடையேயிருந்து அல்லது பகிரங்கப்பதவியை வகிப்பவர்கள் என்ற காரணத்தினால் அத்தகைய பேரவையின் வேலைதொடர்பாகச் சிறப்புத்தகைமை பெற்றுள்ளவர்களான ஆட்களிடையேயிருந்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஐந்திற்குக் குறையாதவர்களும் பத்திற்கு மேற்படாதவர்களுமான ஆட்களைப் பேரவையொன்று கொண்டிருத்தல் வேண்டும்.

(3) அமைச்சர் உறுப்பினர்களுள் ஒருவரை அந்தப் பேரவையின் தவிசாளராக இருப்பதற்கென நியமித்தல் வேண்டும்.

உறுப்பாண்மைக்கு நியமிக்கப்படமுடியாமற்செய்யும் தகைமையீனம்.

26. ஆளொருவர்,—

(அ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக இருப்பின் அல்லது வரின்; அல்லது

(ஆ) பேரவையின் உறுப்பினர் ஒருவர் என்ற வகையில் தமது பணியை நிறைவேற்றுவதை, பங்கமான முறையில் பாதிக்கக்கூடிய சாத்தியம்கொண்ட அத்தகைய ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையை அவர் கொண்டிருப்பின்,

பேரவையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது அவ்வாறு தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்.

உறுப்பினர்களின் பதவிக் காலம்.

27. (1) உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பினால், பதவி விலகுவதனால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் முன்னராகவே பதவியை வறிதாக்கினாலன்றி, மூன்று ஆண்டுகளைக்கொண்டவொரு காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், மீள் நியமனத்துக்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(2) பேரவையொன்றின் உறுப்பினர் எவரும் இறக்கும் அல்லது பதவியை வறிதாக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும் சந்தர்ப்பத்தில் 25 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்டாற்போன்று அதேமுறையில் வேறோர் ஆள் நியமிக்கப்படலாம். அத்தகைய உறுப்பினரின் இடத்தில் நியமிக்கப்பட்ட ஆளெவரும், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்தின்போது பதவி வகித்தல் வேண்டும்.

(3) பேரவையொன்றின் உறுப்பினர் எவரும் ஏதேனும் காலப்பகுதியின்போது சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாக தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், 25 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்டாற் போன்று அதேமுறையில் வேறோராளை அத்தகைய காலப்பகுதியின்போது அவரது இடத்திற் செயலாற்றவென அமைச்சர் நியமிக்கலாம்.

பேரவையொன்றின் கூட்டங்கள்.

28. பேரவையொன்றின் கூட்டங்கள் தொடர்பாகவும் அதனது கூட்ட நடப்பெண் தொடர்பாகவும் அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை தொடர்பாகவும் இப்பாகத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

பேரவையொன்றின் உறுப்பினர்களைப் பதவியிலிருந்து அகற்றல்.

29. (1) அமைச்சரானவர், 25 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவையொன்றின் உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து அகற்றுவது உசிதமானதென அவர் கருதின் அதற்கான காரணங்கள் காட்டாது அவரை அவ்வாறு பதவியிலிருந்து அகற்றலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றுகையானது நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

உறுப்பினர்கள் பதவிவிலகல்.

30. பேரவையொன்றின் உறுப்பினர் எவரும் தான் பதவியிலிருந்து விலகுவதாக எழுதி அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின்மூலம் எந்நேரத்திலேனும் பதவியிலிருந்து விலகலாம்.

பேரவையொன்றின் தத்துவங்களும் பணிகளும்.

31. பேரவையொன்றின் தத்துவங்களும் பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) கைப்பணிகளை மேம்படுத்துவதிலும், அபிவிருத்தி செய்வதிலும் சந்தைப்படுத்தலிலும் ஆலோசனை வழங்கலும் உதவிபுரிதலும்;

(ஆ) கைப்பணிகளின் உற்பத்தியை விரிவுபடுத்தலும் மெருகூட்டப்பட்ட உற்பத்திப் பொருட்களின் தரத்தையும் தராதரத்தையும் சீராக்குதலும்;

(இ) அருங்கலையாக்குநர்க்குப் பயிற்சி அளிக்கும் நோக்கத்திற்காக நிலையங்களையும், வேலைக்களங்களையும் வேறு நிறுவனங்களையும் தாபித்தல், பேணுதல் அத்துடன் தொழிற்படுத்துதல்.

ஒழுங்குவிதிகள்.

32. (1) விதித்துரைக்கப்படுவதற்கு இப்பாகத்தினால் தேவைப்படுத்தப்படும் கருமங்கள் தொடர்பாகவும் குறிப்பாக பின்வரும் கருமங்கள் தொடர்பாகவும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) பேரவையொன்றின் உறுப்பாண்மைக்கு வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் விதமும், முறையும் ;

(ஆ) பேரவையொன்றின் அலுவல்களை நடாத்துவதற்கான நடவடிக்கைமுறை ; அத்துடன்

(இ) பேரவையொன்றின் கணக்கீட்டு, நிதிசார் நடவடிக்கை முறைகள்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எதுவும் எந்தத் தேதியன்று நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அந்தத் தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

## பாகம் III

இலங்கைக் கைப்பணிகள் சபையைத் தாபித்தல்.

33. (1) இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் " சபை " எனக்குறிப்பிடு செய்யப்படுவதும் இலங்கைக் கைப்பணிகள் சபை என அழைக்கப்படுவதுமான சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது, இடையறு வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் ; அத்துடன், தனது கூட்டிணைக்கப்பட்ட பெயரில் அது வழக்குத் தொடரலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத்தொடரவும் படலாம்.

சபையின் உறுப்பினர்கள்.

34. (1) சபையானது, அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டியவர்களான பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) கைப்பணிகள் துறையில் அனுபவமும் அறிவும் பெற்றுள்ளவர்களென அமைச்சருக்குத் தோன்றுபவர்களான ஆட்களிடையேயிருந்து ஐந்து உறுப்பினர்கள் ;

(ஆ) வியாபாரம் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ, அந்த அமைச்சரின் பொறுப்பிலுள்ள அமைச்சிலுள்ளவரும், அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான பிரதிநிதியொருவர் ; அத்துடன்

(இ) நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் பொறுப்பிலுள்ள அமைச்சிலுள்ளவரும் அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான பிரதிநிதியொருவர்.

(2) அமைச்சர் உறுப்பினர்களுள் ஒருவரைச் சபையின் தவிசாளராக இருப்பதற்கென நியமித்தல் வேண்டும்.

(3) சபையானது, அமைச்சர் காலத்திற்குக் காலம் வழங்கக்கூடியவாறான அத்தகைய பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளுக்கமைவாக அதனது தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும், பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய பணிப்புரைகளுடன் இணங்கியொழுகுதல் சபையின் கடமையாதலும் வேண்டும்.

**உறுப்பாண்மைக்கு நியமிக்கப்பட முடியாமற்செய்யும் தகைமையீனம்.**

35. (1) ஆளொருவர் சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது உறுப்பினர் ஒருவராகத் தொடர்ந்திருப்பதிலிருந்து பின்வரும் சந்தருப்பங்களில் தகைமையற்றவராதல் வேண்டும் :—

(அ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அவர் இருப்பின் அல்லது வரின் ; அல்லது

(ஆ) சபையின் உறுப்பினர் ஒருவர் என்ற வகையில் தமது பணிகளை நிறைவேற்றுவதைப் பங்கமானமுறையில் பாதிக்கக்கூடிய சாத்தியங்கொண்ட அத்தகைய ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையை அவர் கொண்டிருப்பின், அமைச்சரால் நியமிக்கப்பட்ட சபையின் ஒவ்வோர் உறுப்பினர் தொடர்பாகவும் அத்தகைய உறுப்பினர் அத்தகைய அக்கறை எதையும் கொண்டிருக்கவில்லை என அமைச்சர் காலத்துக்குக் காலம் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(2) சபையினால் செய்துகொள்ளப்பட்ட அல்லது சபையினால் செய்துகொள்ளப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தம் எதிலும் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ அக்கறை கொண்டுள்ள சபையின் உறுப்பினர் எவரும், சபையின் கூட்டமொன்றில் அத்தகைய அக்கறையின் தன்மையை வெளிவிடுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளிவிடுகையானது சபையின் நிகழ்ச்சிக் குறிப்புகளில் பதியப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய உறுப்பினர் அந்த ஒப்பந்தம் தொடர்பான சபையின் கலந்தாராய்வுகளெதிலுமோ அல்லது முடிபெதிலுமோ பங்குகொள்ளுதலாகாது.

**உறுப்பினர்களின் பதவிக் காலம்.**

36. (1) உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பினால், பதவி விலகுவதனால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் முன்னராகவே பதவியை வறிதாக்கினாலன்றி, மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், மீள்நியமனத்திற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(2) சபையின் உறுப்பினர் எவரும் இறக்கும் அல்லது பதவியை வறிதாக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது அவர் பதவியிலிருந்து அகற்றப்படும் சந்தர்ப்பத்தில் 34 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்டாற்போன்று அதேமுறையில் வேறோராளை அமைச்சர் நியமிக்கலாம். அத்தகைய உறுப்பினரின் இடத்தில் நியமிக்கப்பட்ட ஆளெவரும், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறுதெஞ்சியுள்ள பாகத்தின்போது பதவி வகித்தல் வேண்டும்.

(3) சபையின் உறுப்பினர் எவரும் ஏதேனும் காலப்பகுதியின்போது சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், 34 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்டாற்போன்று அதேமுறையில் வேறோராளை அத்தகைய காலப்பகுதியின்போது அவரது இடத்திற் செயலாற்றவென அமைச்சர் நியமிக்கலாம்.

**சபையின் உறுப்பினர்களைப் பதவியிலிருந்தகற்றல்.**

37. (1) அமைச்சரானவர் 34 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து அகற்றுவது உசிதமானதென அவர் கருதின், அதற்கான காரணங்கள் காட்டாது அவரை அவ்வாறு பதவியிலிருந்தகற்றலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றுகையானது நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

**உறுப்பினர்கள் பதவிவிலகல்.**

38. சபையின் உறுப்பினர் எவரும், தான் பதவியிலிருந்து விலகுவதாக எழுதி, அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின்மூலம் எந்நேரத்திலேனும் பதவியிலிருந்து விலகலாம்.

**உறுப்பினர்களின் ஊதியம்.**

39. சபையின் உறுப்பினர்கள் அனைவருக்கும் அல்லது சபையின் உறுப்பினர் எவருக்கேனும் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய ஊதியம் சபையின் நிதிகளிலிருந்து செலுத்தப்படலாம்.

**சபையின் கூட்டங்களும் கூட்ட நடப்பெண்ணும்.**

40. (1) சபையின் தவிசாளர், சமுகமாயிருப்பின், சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய கூட்டமெதற்கும் தவிசாளர் வருகை தாராவிடின், சமுகமாயுள்ள உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்கவென உறுப்பினர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) சபையின் கூட்டம் எதற்குமான கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) அத்தகைய சபையின் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கைமுறையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பான நடவடிக்கைமுறையும் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(4) சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான பிரச்சினைகள் யாவும் சமுகமாயுள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கைக்

கொண்டு தீர்மானிக்கப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாக இருக்குமிடத்தில் அக்கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) சபை ஆகக்குறைந்தது இரு மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும்.

வெற்றிடம் காரணமாக அல்லது உறுப்பினர்களின் நியமனத்திலுள்ள குறைபாடு காரணமாக செயல்கள் செல்லுபடியற்றனவாதலாகாது.

41. சபையில் ஏதேனும் வெற்றிடம் இருக்கும் காரணத்தினால் மட்டும் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கும் காரணத்தினால் மட்டும் சபையின் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாக அல்லது செல்லுபடியற்றனவாகக் கருதப்படுதலாகாது.

தவிசாளரின் பதவிக்காலம்.

42. (1) தவிசாளரின் பதவிக்காலமானது, சபையில் அவரது உறுப்பாண்மையின் காலப்பகுதியாதல் வேண்டும்.

(2) தவிசாளர், அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின்மூலம் முன்னராகவே தமது பதவியிலிருந்து விலகலாம்.

(3) அமைச்சர் தவிசாளரின் நியமனத்தை முடிவுறுத்துவதற்கான காரணங்கள் எவற்றையும் குறிப்பிடாது எந்நேரத்திலேனும் அவ்வாறு செய்யலாம். அத்தகைய முடிவுறுத்துகையானது நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

சபையின் இலச்சினை.

43. (1) சபையின் இலச்சினையானது சபையின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

(2) சபையின் இலச்சினையானது, சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) சபையின் இலச்சினையானது, சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி, ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படலாகாது. அவர்கள் இருவரும் தாம் சமுகமாயிருந்ததற்குச் சான்றாக சாதனத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

சபையின் குறிக்கோள்கள்.

44. சபையின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:—

(அ) இலங்கையில் கைப்பணிகளின் உற்பத்தியை விரிவுபடுத்தலையும் அத்துடன் அவற்றின் தரத்தின் சீராக்கலையும் மேம்படுத்துதல்;

(ஆ) இலங்கையிலும் வெளிநாட்டிலும் இலங்கைக் கைப்பணிகளின் விற்பனையையும் சந்தைப்படுத்தலையும் மேம்படுத்துதல்; அத்துடன்

(இ) சபையின் அபிப்பிராயப்படி, (அ), (ஆ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவையான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்தல்.

சபையின் தத்துவங்களும் பணிகளும் கடமைகளும்.

45. சபையின் தத்துவங்களும் பணிகளும் கடமைகளும் பின்வருவன வாதல் வேண்டும் :—

(அ) கைப்பணிகளின் உற்பத்தியில் பயன்படுத்தப்படுவதற்கென வடிவமைப்புகளை உருவாக்கும் அல்லது ஏற்றிசைவாக்கும் நோக்கத்திற்காக நிலையங்களையும், வேலைக்களங்களையும் அல்லது வேறு நிறுவனங்களையும் தாபித்தல், பேணுதல், தொழிற்படுத்தல் என்பதுடன் அவற்றைத் தாபிப்பதிலும், பேணுதலிலும், தொழிற்படுத்தலிலும் உதவுதல்; அத்துடன் அத்தகைய நிலையங்களிலும் வேலைக்களங்களிலும் அல்லது வேறு நிறுவனங்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைச் சந்தைப்படுத்துதல்;

(ஆ) கைப்பணிகளின் உற்பத்திக்குத் தேவைப்படும் எந்திரத் தொகுதிக்கும் சாதனங்களுக்கும் மூலப்பொருட்களுக்கும் ஏற்பாடு செய்தல்;

(இ) கைப்பணிகளின் உற்பத்திக்குத் தேவைப்படும் மூலப்பொருட்களைப் பெற்றுக்கொடுத்தல், அவற்றுக்கு ஏற்பாடு செய்தல், அத்துடன் அவற்றை விநியோகித்தல்;

(ஈ) அருங்கலையாக்குநருக்கான இடைக்கால அல்லது குறுகியகால கடன் வசதிகளின்மூலம் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய உதவியளித்தல்;

(உ) அருங்கலையாக்குநரின் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தல்;

(ஊ) கைப்பணிகளின் உற்பத்தியை விரிவுபடுத்தல் அத்துடன் அத்தகைய உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களினதும், மெருகூட்டப்பட்ட உற்பத்திப் பொருட்களினதும் தரத்தைச் சீராக்குதல்;

(எ) அருங்கலைப் பொருட்களையும் அருங்கலை உற்பத்தித் தொழினுட்ப முறைகளையும் சீராக்குவதற்காக அறிவியல், தொழினுட்ப நிறுவனங்களுடனும் ஒழுங்கமைப்புகளுடனும் முகவர் நிலையங்களுடனும் ஒத்துழைத்தல்;

(ஏ) கைப்பணிகளை வெளிக்காட்டி வைப்பதற்கும் விற்பனை செய்வதற்கும், இலங்கையிலும் வெளிநாட்டிலும் கடைகளையும் காட்சி அறைகளையும் பேணுதல் அத்துடன் வெளிக்காட்டல்களையும் கண்காட்சிகளையும் விற்பனைகளையும் நடாத்துதல் என்பதுடன், அத்தகைய விற்பனைகளுக்கு இடைநேர்விளைவான எல்லாச் செயல்களையும் செய்தல்;

(ஐ) இலங்கையிலும் வெளிநாட்டிலும் கைப்பணிகளின் விற்பனையையும் அவற்றின் ஏற்றுமதியையும் மேம்படுத்துதல்;

(ஒ) சபையின் வேலையை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவர்களான அத்தகைய அலுவலர்களையும் ஊழியர்களையும் நியமித்தல்;

(ஓ) சபையினால் ஊழியத்திலமர்த்தப்பட்டுள்ள ஆட்களுக்கு சகாயநிதியத்தைத் தாபித்தல் அத்துடன் நலன்புரி வசதிகளுக்கும் பொழுதுபோக்கு வசதிகளுக்கும் வீடுகளுக்கும், விடுதிகளுக்கும் அதைப்போன்ற வேறு இருப்பிடவசதிகளுக்கும் ஏற்பாடு செய்தல்;

(ஔ) சபையின் அலுவல்களின் நிருவாகம் பற்றி விதிகளை ஆக்குதல்;

(க) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது கேள்வுக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடைவு வைத்தல், விற்பனை செய்தல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல்;

(ங) சபையினால் ஏற்பாடுசெய்யப்பட்ட எவையேனும் சேவைகளுக்காக அல்லது வசதிகளுக்காகக் கட்டணங்களை விதித்தல்; அத்துடன்

(ச) அதனது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இடைநேர் விளைவான அல்லது அவற்றின் விளைவாந்தன்மையினவான அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களையும் புரிதல்.

அமைச்சரின் பணிப்புரைகள்.

46. (1) சபையின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தல், நிறைவேற்றுதல், புரிதல் பற்றிய பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளை அமைச்சர் காலத்திற்குக்காலம் சபைக்கு வழங்கலாமென்பதுடன், அத்தகைய பணிப்புரைகள் சபையினால் நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

(2) அமைச்சரானவர், சபையின் ஆதனம், அலுவல், செயற்பாடுகள் ஆதியன தொடர்பாக அவர் தேவைப்படுத்தக்கூடியதான அத்தகைய தகவலை அவருக்குக் கொடுத்துதவுமாறு காலத்திற்குக்காலம் சபைக்கு எழுத்துமூலம் பணிப்புரை வழங்கலாம் என்பதுடன், அத்தகைய பணிப்புரை ஒவ்வொன்றையும் சபை நிறைவேற்றுதலும் வேண்டும்.

ஊழியர்களுக்கு தவிசாளரால் தத்துவங்கள் கையளிக்கப்படுதல்.

47. தவிசாளரானவர் சபையின் எழுத்திலான அங்கீகாரத்துடன், அதனது எவையேனும் தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளை சபையின் ஊழியர் எவருக்கும் எழுத்துமூலம் கையளிக்கலாம்.

கைப்பணிகளைச் சந்தைப்படுத்தல், ஏற்றுமதி மேம்படுத்தல் திணைக்களத்தினதும் இயைபான பிரிவுகள் பற்றியனவாய் சிறுகைத்தொழில்கள் திணைக்களத்தினதும் வைத்திருக்கப்பட்ட ஆதனத்தை சபைக்குக் கைமாற்றுதல்.

48. இப்பாகம் நடைமுறைக்கு வந்தபின்னர் வசதியானளவு விரைவாகவும், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படும் ஒரு தேதியிலிருந்தும் கைப்பணிகளைச் சந்தைப்படுத்தல், ஏற்றுமதி மேம்படுத்தல் திணைக்களத்தின் உடைமையிலும் கட்டுப்பாட்டிலும் உள்ள (காசு உட்பட) எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களும் அத்துடன் இத்னகத்துப்பின்னர் "இயைபான பிரிவுகள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவனவும் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளனவுமான சிறுகைத்தொழில்கள் திணைக்களத்தின் அத்தகைய பிரிவுகள் பற்றியனவாய் சிறுகைத்தொழில்கள் திணைக்களத்தின் உடைமையிலும் கட்டுப்பாட்டிலும் உள்ள (காசு உட்பட) எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளனவான கைப்பணிகளைச் சந்தைப்படுத்தல், ஏற்றுமதி மேம்படுத்தல் திணைக்களத்தினதும் இயைபான பிரிவுகள் பற்றியனவாய் சிறுகைத்தொழில்கள் திணைக்களத்தினதும் எல்லாச் சொத்துக்களுடனும், பொறுப்புக்களுடனும், தத்துவங்களுடனும், உரிமைகளுடனும், அக்கறைகளுடனும் அத்துடன் சிறப்புரிமைகளுடனும் சேர்த்து சபைக்குக் கைமாற்றப்பட்டு உரித்தாக்கப்படல் வேண்டும்.

சபையின் பணியாட்டொகுதி.

49. சபை, அவசியமானதெனக் கருதக்கூடியவர்களான அத்தகைய அலுவலர்களும் சேவையாளர்களும் சபையின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படலாம்.

கைப்பணிகளைச் சந்தைப்படுத்தல், ஏற்றுமதி மேம்படுத்தல் திணைக்களத்தினதும் சிறுகைத் தொழில்கள் திணைக்களத்தினதும் குறித்தசில பகிரங்க ஊழியர்களால் கொடுக்கப்படுமாறு தேவைப்படுத்தப்படும் அறிவித்தல்.

50. (1) இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று கைப்பணிகளைச் சந்தைப்படுத்தல், ஏற்றுமதி மேம்படுத்தல் திணைக்களத்திலோ அல்லது சிறுகைத்தொழில்கள் திணைக்களத்தின் இயைபான பிரிவுகளிலோ ஊழியத்திலமர்த்தப்பட்டிருந்தவரும், எவரின் பதவிக்குரிய பணிகள் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளனவோ அல்லது சபையினால் கையேற்கப்பட்டுள்ளனவோ அந்தப் பதவியை வகித்தவரும், அரசாங்கத்தில் இடமாற்றம் பெறத்தகு சேவையொன்றிலுள்ள எவரேனும் பகிரங்க அலுவலரொருவர் தவிர்ந்தவருமான ஒவ்வொரு பகிரங்க அலுவலருக்கும் இப்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவு ஏற்புடையதாகின்றவரும் ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புகளின்கீழ் ஓய்வூதியம் பெறுதகு பதவியென வெளிப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிப்பவருமான பகிரங்க அலுவலரொவ்வொருவரும், எத்தேதியன்று 48 ஆம் பிரிவின்கீழான கட்டளை ஆக்கப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு மேற்படாது, அத்தகைய அலுவலர் அத்தகைய தேதியிலிருந்து—

(அ) பகிரங்க அலுவலரொருவராகத் தொடர்ந்து பதவி வகிப்பதற்கும், அத்தகைய அலுவலர் என்ற தன்மையில் சபைக்காகவும் சபையின் சார்பிலும் அவர் அவ்வாறு தொடர்ந்து வேலை பார்க்கும் காலம் வரைக்கும் பணி புரிவதற்கும்; அல்லது

(ஆ) ஓய்வூதியம் பெறுதகு அலுவலரொருவராயிருந்து கொண்டு அவர், ஓய்வூதியம் பெறுதகு சேவையில் பத்து ஆண்டுகளுக்குக் குறையாத ஓய்வூதியம் பெறுதகு சேவையை அத்தேதியன்று உடையவராயிருந்திருப்பின் பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்று சபையின் ஊழியரொருவராக வருவதற்கு; அல்லது

(இ) ஓய்வூதியம் பெறுதகு அலுவலரொருவராயிருந்து கொண்டு அவர், ஓய்வூதியம் பெறுதகு சேவையில் பத்து ஆண்டுகளுக்குக் குறையாத ஓய்வூதியம் பெறுதகு சேவையை அத்தேதியன்று உடையவராயிருந்திருப்பின், பகிரங்க சேவையை விட்டு விலகி சபையின் ஊழியரொருவராக வருவதற்கு; அல்லது

(ஈ) பகிரங்க சேவைச் சகாய நிதியக் கட்டளைச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவைச் சகாய நிதியத்துக்கு உதவு தொகை செலுத்துநர் ஒருவராக அவர் இருப்பின், பகிரங்க சேவையை விட்டு விலகி சபையின் ஊழியரொருவராக வருவதற்கு; அல்லது

(உ) பகிரங்க சேவையைவிட்டு விலகுவதுடன் சபையின் ஊழியரொருவராக வராதிருத்தல் ஆகிய இரண்டிற்கும்,

முன்னுகின்றாரென்ற எழுத்திலான அறிவித்தலைச் சபைக்குக் கொடுத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட அறிவித்தலொன்றானது இறுதியானதாதல் வேண்டும்.

*1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தின் குறித்த சில ஏற்பாடுகள் 50 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அலுவலர்களுக்கு ஏற்புடையனவாதல்.*

51. ஆயிரத்துதொளாயிரத்து அறுபத்தொன்பதாம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 31ஆ, 31 இ, 32, 32அ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகள், 50 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*50 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவர்கள் தவிர்ந்த, பகிரங்க அலுவலர்களை நியமனம் செய்தல்.*

52. (1) சபையினது வேண்டுகோளின்பேரில், 50 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அலுவலரொருவர் தவிர்ந்த, பகிரங்கசேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அந்த அலுவலரின் சம்மதத்துடனும், எந்த அமைச்சினால் அல்லது அமைச்சின் கீழ் அந்த அலுவலர் ஊழியத்திலமர்த்தப்பட்டுள்ளாரோ, அந்த அமைச்சுச் செயலாளரினது சம்மதத்துடனும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினது சம்மதத்துடனும் சபையின் பணியாட்தொகுதிக்கு, அதேபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு அதேபோன்ற சம்மதத்துடன் நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பகிரங்க அலுவலரொருவர் அவ்வுட்பிரிவின்கீழ் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பகிரங்க அலுவலரொருவர் அவ்வுட்பிரிவின்கீழ், சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) சபையினது வேண்டுகோளின் பேரில், உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அந்த அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்துடனும் விடயத்திற்கேற்றாற்போன்று, உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் சம்மதத்துடனும், அதேபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது சபையும் உள்ளூராட்சிச்சேவை ஆலோசனைச்சபையும் அல்லது உள்ளூரதிகார சபையும் உடன்பட்டுக்கொள்ளக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மீதும் நிபந்தனைகளின் மீதும் (ஓய்வூதிய உரிமைகள் அல்லது சகாயநிதிய உரிமைகள் தொடர்பான நியதி நிபந்தனைகள் உட்பட) அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(5) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரினது அல்லது சேவையாளரினது சம்மதத்துடனும், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அதேபோன்ற சம்மதத்துடனும் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது சபையும் சொல்லப்பட்ட பகிரங்கக் கூட்டுத்தாபனமும் உடன்பட்டுக் கொள்ளக்கூடியவாறான (ஓய்வூதிய உரிமைகள் அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பான நியதி, நிபந்தனைகள் உட்பட) அத்தகைய நியதிகளின் மீதும் நிபந்தனைகளின் மீதும் அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) உள்ளூராட்சிச்சேவையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவர் (அவர் உள்ளூராட்சிச் சேவையில் உறுப்பினரொருவராக இருப்பினும்சரி, இல்லாவிடினும்சரி) (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளின்கீழ், சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய பணியாட்டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினரைப்போன்று அதேவகையான ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அத்தகைய ஆள் அமைந்தவராதல் வேண்டும்.

**அரசாங்கத்துக்கு சேவை ஆற்றுவதற்கான ஒப்பந்தங்களின் நோக்கத்துக்காக, சபைக்கு ஆற்றப்படும் சேவை அரசாங்கத்துக்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல்.**

53. குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவார் என உடன்பட்டு, அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றை எவரேனுமாள் செய்துள்ளவிடத்து, அந்த ஆளினால் சபைக்கு ஆற்றப்படும் சேவைக்காலப்பகுதி எதுவும் அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, அரசாங்கத்துக்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

**ஏலவே ஓய்வூதியங்களைப் பெறும் ஆட்கள் சபையினால் ஊழியத்திலமர்த்தப்படல்.**

54. வேறேதேனும் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், அரசாங்கத்திடமிருந்து அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையிடமிருந்து அல்லது உள்ளூராட்சிச்சேவை ஆணைக்குழுவிடமிருந்து ஏலவே ஓய்வூதியமொன்றினைப் பெறுகின்றவரான எவரேனுமாள் சபையினால் ஊழியத்தில் அமர்த்தப்படுமிடத்து, சபையினால் அவர் ஊழியத்திலமர்த்தப்பட்டிருக்கும் காலப்பகுதியின்போது அவருக்கு அத்தகைய ஓய்வூதியம் செலுத்தப்படுதலாகாது.

**பொருள்கோடல்.**

55. இப்பாகத்தின் நோக்கங்களுக்காக—

"ஓய்வூதியம் பெறுதகு பகிரங்க அலுவலர்" என்பது—

(அ) ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புகளின் 2 ஆம் பிரிவின்கீழ் ஓய்வூதியம் பெறுதகு பதவியொன்றென வெளிப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கின்றவரும்; அத்துடன்

(ஆ) அரசாங்கத்தின் இடமாற்றத்தகு சேவையொன்றைச் சாராதவரும்,

ஆன பகிரங்க அலுவலரொருவர் எனப் பொருளாகும்;

"ஓய்வூதியம் பெறுதகு சேவை" என்பது ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்துக்கெனக் கணக்கிடப்படக்கூடியதான அரசாங்கத்தின் கீழான சேவை எனப் பொருளாகும்.

இந்தப் பாகத்தின்கீழ் அல்லது சபையின் பணிப் புரையின்மீது செய்யப்படும் செயலுக்கான பாதுகாப்பு.

56. (அ) இந்தப் பாகத்தின்கீழ், சபையால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்கெனச் சபைக்கெதிராக; அல்லது

(ஆ) இந்தப் பாகத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்புரையின் மீது, சபையின் எவரேனும் உறுப்பினரால், ஊழியரால் அல்லது முகவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்கென அவருக்கெதிராக,

ஒரு தொடர்ச்சியோ அல்லது குற்றவழக்கோ எழுதலாகாது.

சபையின் உறுப்பினர்களும் ஊழியர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல்.

57. சபையின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும், ஊழியர்களும் தண்டனைச்சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட சபையானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப் படல்.

58. சபையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

சபையின் நிதியம்.

59. சபையானது தனக்கென நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். சபையினால் பெறப்படுபவை யாவும் அந்நிதியத்துக்குள் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், சபையினால் செய்யப்படும் எல்லாக் கொடுப்பனவுகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதலும் வேண்டும்.

சபையின் மூலதனம்.

60. (1) சபையின் ஆரம்ப மூலதனமானது திரட்டு நிதியத்திலிருந்து பாராளுமன்றத்தின் தீர்மானத்தினால் சபைக்கு வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையாதல் வேண்டும்.

(2) சபையின் மூலதனமானது, பாராளுமன்றத்தின் தீர்மானத்தினால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையினால் காலத்துக்குக் காலம் அதிகரிக்கப்படலாமென்பதுடன், அத்தொகையானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளினதும் நிபந்தனைகளினதும் மீதான மானியக்கொடையெனும் வகையாக அல்லது கடனெனும் வகையாகச் சபைக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும் அல்லது கிடைக்கச் செய்யப்படலும் வேண்டும்.

(3) நாற்பத்தெட்டாம் பிரிவின்கீழ் சபைக்குக் கைமாற்றப்பட்ட எல்லா அசைவுள்ள ஆதனத்தினதும் அசைவற்ற ஆதனத்தினதும், எல்லாச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் தேறிய பெறுமானம் அல்லது அத்தகைய அசைவுள்ள ஆதனத்தினதும் அசைவற்ற ஆதனத்தினதும் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் தேறிய பெறுமானத்தின் ஏதேனும் பாகம், (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள சபையின் மூலதனத்தின் அதிகரிப்புத் தொகையின் பாகமாக அமைவதாகக் கருதப்படலாம்.

61. பணியாட்டொகுதியினரின் சம்பளங்களினதும் ஏனைய வேதனாதிகளினதும் செலவுகளைச் சமாளிப்பதற்காகவும், 48 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட "இயைபான பிரிவுகளுக்கு" சொந்தமான அசைவற்ற ஆதனத்தைப் பேணும் நோக்கத்துக்காகவும் பாராளுமன்றம் ஆண்டுதோறும் சபைக்கு மானியக்கொடையொன்றை வழங்கலாம். சபைக்கான ஆண்டு மானியக் கொடை.

62. சபையானது, அமைச்சரின் சம்மதத்துடன் அல்லது அவரால் கொடுக்கப்பட்ட ஏதேனும் பொதுவான அதிகாரத்தின் நியதிகளுக்கு இணங்க, சபை, அதன் கட்டுப்பாடுகளை மேவுவதற்கென அல்லது இச்சட்டத்தின்கீழான அதனது கடமைகளை நிறைவேற்றுவதற்கெனத் தேவைப்படக்கூடியனவான அத்தகைய பணத்தொகைகளை வங்கிமேலதிகப்பற்று வழியாக அல்லது வேறு வகையாகத் தற்காலிகமாகக் கடன் எடுக்கலாம் : கடனெடுப்பதற்கான தத்துவங்கள்.

ஆயின், இப்பிரிவின்கீழ் சபையினால் பெறப்பட்ட எவையேனும் தற்காலிகக் கடன்கள் தொடர்பில் நிலுவையாகவுள்ள தொகையின் கூட்டுமொத்தமானது எந்நேரத்திலேனும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை விஞ்சுதலாகாது.

63. சபையினது அலுவலின் நோக்கங்களுக்கென உடனடியாகத் தேவைப்படாத சபையின் எவையேனும் நிதிகள், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடன் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் சபையினால் முதலீடு செய்யப்படலாம். சபையின் நிதிகளை முதலீடு செய்தல்.

64. (1) சபையின் நிதியாண்டானது பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். சபையின் நிதி ஆண்டும் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலும்.

(2) சபையின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய செவ்வையான கணக்குப் புத்தகங்களைச் சபை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வது தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், சபையின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு, ஏற்புடையனவாதல் வேண்டும்.

65. சபையானது ஒவ்வொரு நிதியாண்டிலும் நவம்பர் மாதத்தில் முதல் நாளுக்கு முன்னராக, அடுத்த நிதியாண்டின்போது சபையால் பொறுப்பேற்கப்படவுள்ள மூலதனச் செலவினத்தை உட்படுத்துவதான வேலையின் நிகழ்ச்சித் திட்டமொன்றை அமைச்சருக்கு, அவரின் அங்கீகாரத்துக்கென அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதுடன், அந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக அமைச்சரால் கொடுக்கப்பட்ட எவையேனும் பணிப்புரைகளை சபை கருத்திற்கொள்ளுதலும் வேண்டும். நிதியாண்டொன்றின்போது சபையினால் பொறுப்பேற்கப் பட்டுள்ள வேலையின் நிகழ்ச்சித் திட்டம் அமைச்சருக்கு அங்கீகாரத்துக்கென அனுப்பப்படுதல்.

ஒழுங்குவிதிகள்.

66. (1) விதித்துரைக்கப்படுவதற்கு இப்பாகத்தினுல் தேவைப்படுத்தப்படும் கருமங்கள் தொடர்பாக அல்லது எக்கருமங்கள் தொடர்பாக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் தொடர்பாக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினுல் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாருன அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினுல் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்பட்டபின்னர், வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கிகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அதன்கீழ் முன்னதாகச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படல் வேண்டும். அமைச்சரினுல் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எதுவும் அவ்வாறு நீக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

உரிமைக்கோரிக்கைகளை இணக்குவதற்கான சபையின் தத்துவம்.

67. சபையானது, சபையின் நலன்களைக் கருத்திற்கொண்டு நியாயமானதெனக் கருதுமிடத்தும் அமைச்சரின் அங்கீகாரத்துடனும் எவரேனும் ஆளினுல் சபைக்கெதிராகச் செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் எவற்றையும் அல்லது கோரிக்கை எதையும் சபை போதியதெனக் கருதக்கூடியதான அத்தகைய பணத்தொகைக்கு அல்லது வேறு நட்டஈட்டுக்கு இணக்கலாம்.

சபையுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதற்கு கம்பெனிகள் முதலியனவற்றுக்குள்ள தத்துவம்.

68. ஏதேனும் கம்பெனி அல்லது வேறு ஆட்கள் குழு, அதனது பணிகள் சம்பந்தமாக எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் அல்லது சாதனத்தில் முரணுகை எது எப்படியிருப்பினும், அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபையின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்திற்கு அவசியமாகக் கூடியவையான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் சபையுடன் செய்து கொள்ளலாம் என்பதுடன், நிறைவேற்றவும் செய்யலாம்.

அசைவுள்ள, அசைவற்ற அரச ஆதனம் சபைக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்படல்.

69. (1) காணி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரானவர், அமைச்சரின் வேண்டுகோளின்பேரில் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சபையின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக அரசின் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தினது உடைமையையும் பயன்பாட்டையும் சபைக்குக் கைமாற்றி உரித்தாக்கலாம்.

(2) அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சபையின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தினது உடைமையையும் பயன்பாட்டையும் சபைக்குக் கைமாற்றி உரித்தாக்கலாம் :

ஆயின், எவ்வாருயினும், அரசின் அசைவுள்ள ஆதனம் எதனையும் பாதிக்கும் கட்டளை எதுவும், அத்தகைய ஆதனத்தின் மீது கட்டுப்பாடு கொண்டுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி, இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் அமைச்சரினுல் ஆக்கப்படலாகாது.

70. (1) சபையின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காக அசைவற்ற ஆதனம் எதுவும் கொள்ளப்படுவதற்குத் தேவைப்படுமிடத்து, அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் உத்தேசக் கொள்ளலை அங்கீகரிக்கலாம் என்பதுடன், அக்காணி எந்நோக்கத்திற்காகத் தேவைப்படுகின்றதோ அந்நோக்கமானது பகிரங்க நோக்கமொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும். காணி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் அதன் பின்னர் அத்தகைய அசைவற்ற ஆதனத்தைக் காணி கொள்ளற் சட்டத்தின்கீழ் கொள்ளலாம்.

காணி கொள்ளற் சட்டத்தின் கீழ் அசைவற்ற ஆதனத்தைச் சபைக்காகக் கொள்ளல்.

(2) சபைக்காக, காணிகொள்ளற் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனத்துக்காகச் செலுத்தப்படற்பாலதான பணத்தொகை எதுவும் சபையினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

பாகம் IV

71. (1) இதனகத்துப்பின்னர், இப்பாகத்தில் " நிலையம் " என்று குறிப்பீடு செய்யப்படும் தேசிய வடிவமைப்பு நிலையமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

தேசிய வடிவமைப்பு நிலையம்.

(2) இந்நிலையமானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், இடையறு வழியுரிமையும், பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடரலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம்.

72. நிலையமானது, அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டியவர்களான பின்வரும் உறுப்பினர்களைக்கொண்ட சபையொன்றினால் முகாமை செய்யப்படுதல் வேண்டும் :—

சபையின் அமைப்பு.

(i) அருங்கலைகளின் ஆராய்ச்சி, உற்பத்தி, அபிவிருத்தி, வடிவமைப்பு ஆகிய துறைகளில் பரந்த அறிவும், அனுபவமும் உடையவர்களும், இத்துறைகளில் திறமை காட்டியுள்ளவர்களும் என அமைச்சருக்குத் தோன்றுகின்றவர்களான ஆட்களுள் இருந்து தவிசாளரொருவரும் வேறு நான்கு ஆட்களும் ;

(ii) தேசிய அருங்கலைகள் பேரவையின் தவிசாளர் ;

(iii) இலங்கை கைப்பணிகள் சபைத் தவிசாளர் ;

(iv) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அத்தகைய அமைச்சரது அமைச்சின் அலுவலரொருவர் ; அத்துடன்

(v) ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தவிசாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அச்சபையின் பிரதிநிதியொருவர்.

73. ஆளொருவர்,—

உறுப்பாண்மைக்கு நியமிக்கப்பட முடியாமற் செய்யும் தகைமையினம்.

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது வரின் ;

(ஆ) சபையினால் அல்லது அதன் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை நேரடியாக அல்லது மறைமுகமாக வைத்திருப்பின் அல்லது துய்ப்பின் ; அல்லது

(இ) சபையின் உறுப்பினர் ஒருவர் என்ற வகையில் தமது பணிகளை நிறைவேற்றுவதைப் பங்கமானமுறையில் பாதிக்கக்கூடிய சாத்தியம் கொண்ட அத்தகைய ஏதேனும் நிதிசார் அக்கறையை அல்லது வேறு அக்கறையை அவர் கொண்டிருப்பின்,

சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது அவ்வாறு தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்.

அக்கறைகளை உறுப்பினர் சபைக்கு வெளிவிடுதல்.

74. சபையினால் கையாளப்படும் அல்லது கையாளப்படுவதற்கு உத்தேசிக்கப்படும் ஏதேனும் அலுவலில் நேரடியாக அல்லது மறைமுகமாக அக்கறை கொண்டுள்ள உறுப்பினரொருவர், அத்தகைய அக்கறையின் தன்மையினை அத்தகைய அலுவலைப்பற்றி ஆராயப்படும் சபையின் கூட்டத்தில் வெளிவிடுதல் வேண்டும். அத்தகைய வெளிவிடுகை சபையின் நிகழ்ச்சிக் குறிப்புகளில் பதியப்படல் வேண்டும்; அத்துடன், அத்தகைய உறுப்பினர் அவ்வலுவல் தொடர்பாக சபையின் கலந்தாராய்வு அல்லது முடிபு எதிலும் பங்குபற்றுதல் ஆகாது என்பதுடன், அத்தகைய கலந்தாராய்வு நடந்து கொண்டிருக்கையில் அல்லது அத்தகைய முடிபு செய்யப்படுகையில் அவர் அத்தகைய கூட்டத்திலிருந்து வெளியகலுதலும் வேண்டும்.

சபையின் கூட்டங்களும் கூட்ட நடப்பெண்ணும்.

75. (1) சபையின் தவிசாளர் சமுகமாயிருப்பின், சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் வருகைதராதவிடத்து, சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குவதற்கென உறுப்பினர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) அத்தகைய சபையின் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பான நடவடிக்கை முறையும் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(4) சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான பிரச்சினைகள் யாவும் சமுகமாயுள்ள உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் வாக்கைக் கொண்டு தீர்மானிக்கப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாக இருக்குமிடத்தில் அக்கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வெற்றிடம் காரணமாக அல்லது உறுப்பினர்களின் நியமனத்திலுள்ள குறைபாடு காரணமாக செயல்கள் செல்லுபடியற்றனவாதல் ஆகாது.

76. சபையில் ஏதேனும் வெற்றிடம் இருக்கும் காரணத்தினால் மட்டும் அல்லது சபையின் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கும் காரணத்தினால் மட்டும் சபையின் செயல் அல்லது முடிபு எதுவும் அல்லது நடவடிக்கைகள் எவையும் செல்லுபடியற்றதாக அல்லது செல்லுபடியற்றனவாகக் கருதப்படுதலாகாது.

உறுப்பினர்களின் பதவிக் காலம்.

77. (1) உறுப்பினர் ஒவ்வொருவரும் இறப்பினால், பதவி விலகுவதனால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் முன்னராகவே பதவியை வறிதாக்கினாலன்றி, மூன்று ஆண்டுகளைக்கொண்டவொரு காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், மீள்நியமனத்திற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(2) சபையின் உறுப்பினர் எவரும் இறக்கும் அல்லது பதவியை வறிதாக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது அவர் பதவியிலிருந்து அகற்றப்படும் சந்தர்ப்பத்தில், 72 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்டாற்போன்று அதே முறையில் வேறோர் ஆளை அமைச்சர் நியமித்தல்வேண்டும். அத்தகைய உறுப்பினரின் இடத்தில் நியமிக்கப்பட்ட ஆளெவரும் அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறுதெஞ்சியுள்ள பாகத்தின் போது பதவி வகித்தல் வேண்டும்.

(3) சபையின் உறுப்பினர் எவரும் ஏதேனும் காலப்பகுதியின்போது சுகவீனம் காரணமாக, அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், 72 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்டாற்போன்று அதே முறையில் வேறோர் ஆளை அத்தகைய காலப்பகுதியின்போது அவரது இடத்திற் செயலாற்றவென அமைச்சர் நியமிக்கலாம்.

**சபை உறுப்பினர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல்.**

78. (1) அமைச்சரானவர் 72 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து அகற்றுவது உசிதமென அவர் கருதினால், அதற்கான காரணங்கள் காட்டாது அவரை அவ்வாறு பதவியிலிருந்து அகற்றலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றுகையானது, நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

**உறுப்பினர்கள் பதவி விலகல்.**

79. சபையின் உறுப்பினர் எவரும் தான் பதவியிலிருந்து விலகுவதாக எழுதி அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின்மூலம் எந்நேரத்திலும் பதவியிலிருந்து விலகலாம்.

**சபை உறுப்பினர்களின் ஊதியம்.**

80. நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் உறுப்பினர்கள் எல்லோருக்கும் அல்லது அவர்களில் எவருக்கேனும், நிலையத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

**நிலையத்தின் இலச்சினை.**

81. (1) நிலையத்தின் இலச்சினையானது, தவிசாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) நிலையத்தின் இலச்சினையானது சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) நிலையத்தின் இலச்சினையானது, சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது ; அவர்களிருவரும் தாம் சமுகமாயிருந்ததற்குச் சான்றாக சாதனத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

**நிலையத்தின் தத்துவங்களும் பணிகளும்.**

82. நிலையத்தின் தத்துவங்களும் பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) சிறுகைத்தொழில்களுக்காக வடிவமைப்புகளையும், கைப்பணிகளின் உற்பத்திக்காகவும் அத்தகைய கைப்பணிகளை வடிவமைப்பதற்காகவும் பயன்படுத்தப்படும் பொருட்கள் தொடர்பில் ஆராய்ச்சிகளைப் பொறுப்பேற்றலும், இறக்குமதி செய்யப்பட்ட மூலப்

பொருட்களுக்காக உள்ளூர் மூலப்பொருட்களின் பயன்பாட்டைப் பதிலீடு செய்ய நாடுதலும்;

(ஆ) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் சந்தை அபிவிருத்தி பற்றியும் இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்ட கைப்பணிகளுக்கு வேறு நாடுகளிலுள்ள கேள்வி அறிதல் பற்றியும் தெரிந்துகொள்ளுதல்;

(இ) கைப்பணிகளின் உற்பத்திபற்றிப் புதியவையும், கூடிய வினைத் திறம் உடையனவுமான முறைகளை உருவாக்குதல்;

(ஈ) சிக்கனம்மிக்கதாகவும் வினைத்திறம்மிக்கதாகவும் கைப்பணிகளின் உற்பத்தியை ஆக்கும் நோக்கொன்றுடன் பொறிமயமாக்குதலை அறிமுகப்படுத்துவதுபற்றி ஆராய்தல்;

(உ) பயன்படுத்தப்படும் முறைகள், மூலப்பொருட்களைப் பயன்படுத்துதல் அத்துடன் பொதுவாகக் கைப்பணிகளின் அபிவிருத்தியிலும் உற்பத்தியிலும் கைப்பணிகளின் உற்பத்தி பற்றிய கருமங்கள் தொடர்பில் இலங்கைக் கைப்பணிகள் சபைக்கும் அருங்கலையாக்குநருக்கும் ஆலோசனை வழங்குதலும் உதவிசெய்தலும்;

(ஊ) தேசிய அருங்கலைகள் பேரவையினதும், இலங்கைக் கைப்பணிகள் சபையினதும், அருங்கலைகள் பேரவைகளினதும், வேறு குழுக்களினதும் அல்லது ஆட்களினதும் வேண்டுகோளின்பேரில் கைப்பணிகளின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் தொடர்பாக ஆய்வுகளைக் கொண்டுநடாத்துதல் என்பதுடன், அத்தகைய பொருட்களின் தரம், தராதரம் ஆகியனபற்றி விதிக்கப்பட்டவாறான அத்தகைய சான்றிதழ்களையும் வழங்குதல்;

(எ) தேசிய அருங்கலைகள் பேரவைக்கும், இலங்கைக் கைப்பணிகள் சபைக்கும், அருங்கலைகள் பேரவைகளுக்கும், அருங்கலையாக்குநருக்கும் பெறுமதிமிக்கவையாக இருக்கக்கூடியவையான பொருட்கள், முறைகள், வடிவமைப்புக்கள், சந்தை வியாபாரம் ஆகியன பற்றிய தகவல் வங்கியொன்றைப் பேணுதல்;

(ஏ) நிலையத்தினால் ஆற்றப்படும் சேவைகளுக்காகக் கட்டணங்களை விதித்தலும் அவற்றைச் சேகரித்தலும்;

(ஐ) ஆய்வுகூடங்களையும் வேலைக்களங்களையும் வேறு நிறுவனங்களையும் பேணுதல்;

(ஒ) அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிலையத்தின் குறிக்கோள்களுடன் முழுமையாக அல்லது பகுதியளவில் ஒத்த குறிக்கோள்களையுடைய இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளைச் செய்தல்; அத்துடன்

(ஓ) அதன் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கையிலும், புரிகையிலும், நிறைவேற்றுகையிலும் அவற்றிற்கு இடைநேர்விளைவான அல்லது விளைவாந்தன்மையினவான அத்தகைய செயல்களைப் புரிதல்.

நிலையத்தின் நிதியம்.

83. (1) நிலையம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். நிலையத்தின் நிதியத்துக்குள் பின்வருவன வரவு வைக்கப்படுதல் வேண்டும் :—

(அ) நிலையத்தின் பயன்பாட்டிற்கெனப் பாராளுமன்றத்தினால் காலத்திற்குக் காலம் வாக்களிக்கப்படக்கூடியவையான அத்தகைய பணத்தொகைகள் யாவும் ;

(ஆ) இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள எத்தகையதுமான மூலத்திலிருந்தும் நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாக நிலையத்திற்குக் கைமாற்றப்படக் கூடியவையான அத்தகைய பணத்தொகைகள் யாவும்; அத்துடன்

(இ) ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தினால், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது வேறு நிறுவனத்தினால் நிலையத்திற்கு, சட்டத்திற்கிணங்கக் கைமாற்றப்படக்கூடியவையான அத்தகைய பணத்தொகைகள் யாவும்.

(2) நிலையமானது அதனது தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் நிலையத்தால் உறப்பட்ட செலவினம் எதனையும் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படக்கூடியவையான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிலையத்தின் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

நிலையத்தின் நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.

84. (1) நிலையத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) நிலையத்தின் வருமானமும், செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன், மற்ற எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய செவ்வையான கணக்குப் புத்தங்களை நிலையம் வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வது தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், நிலையத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

நிலையத்தின் பணியாட்டொகுதி.

85. (1) நிலையத்தின் நோக்கங்களுக்கு அவசியமென சபை கருதக் கூடியவர்களான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நிலையத்தின் பணியாட்டொகுதிக்குச் சபை நியமிக்கலாம்.

(2) இப்பாகத்தின் மற்ற ஏற்பாடுகளுக்கமைய, சபையானது—

(அ) நிலையத்தின் பணியாட்டொகுதியினரை நியமிக்கலாம், நீக்கலாம் என்பதுடன், அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டையும் பிரயோகிக்கலாம் ;

(ஆ) பணியாட்டொகுதியின் கூலிகளை அல்லது சம்பளங்களை அல்லது வேறு ஊதியத்தை நிர்ணயிக்கலாம் ;

(இ) அத்தகைய பணியாட்டொகுதியின் சேவை நியதி நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம் ; அத்துடன்

(ஈ) அத்தகைய பணியாட்டொகுதியின் நலனுக்கெனச் சகாய நிதிய மொன்றினையும் திட்டங்களையும் தாபித்து ஒழுங்குபடுத்தலா மென்பதுடன், அத்தகைய நிதியத்துக்கு அல்லது திட்டங்களுக்கு உதவுதொகைகளையும் அளிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட எல்லாக் கருமங் கள் தொடர்பிலும் அல்லது எக்கருமம் தொடர்பிலும் இப்பாகத்தின்கீழ் விதிகள் ஆக்கப்படலாம்.

(4) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலு வலர் எவரும், அவ்வலுவலரின் சம்மதத்துடனும் அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரது அமைச்சுச் செயலாளரினது சம்மதத்துடனும், அதேபோன்ற சம்மதத்துடன் சபையி னால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குச் சபை யின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந் தரமாக நியமிக்கப்படலாம்.

(5) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரேனும், நிலையத்தின் பணி யாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும், அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரேனும், நிலையத்தின் பணி யாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், அவ ருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு அரசாங்கத்திற்குச் சேவை புரிவதற்கு உடன்பட்டுள்ள எவரேனும் ஆளை, சபை ஊழியத்தி லமர்த்துகின்றவிடத்து, அந்த ஆளினால் நிலையத்துக்கு ஆற்றப்படும் சேவைக்காலப்பகுதியெதுவும், அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடு களை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்திற்காற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(8) சபையின் வேண்டுகோளின்பேரில், உள்ளூராட்சிச் சேவையின் உறுப்பினர் எவரும் அல்லது உள்ளூரதிகாரசபையொன்றின் வேறெவரே னும் அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், விடயத்துக்கேற்ப, அத்த கைய உறுப்பினரின், அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்துட னும், அத்துடன், உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் சம்மதத்துடனும், அதையொத்த சம்மதத் துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்கு நிலையத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப் படலாம், அல்லது சபையும் விடயத்துக்கேற்ப, உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச்சபையும் அல்லது அவ்வுள்ளூரதிகாரசபையும் உடன்பட்டுக் கொள்ளக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மீதும் நிபந்தனைகளின் மீதும், (ஓய்வூதிய உரிமைகள் அல்லது சகாயநிதிய உரிமைகள் தொடர்பி லான நியதி, நிபந்தனைகள் உட்பட) அதையொத்த சம்மதத்துடன் அத் தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(9) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் அலுவலர் அல்லது சேவையாளர், எவரேனும் அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் அத்துடன் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினதும் சம்மதத்துடனும், அதையொத்த சம்மதத்துடன் நிலையத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்கு நிலையத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது சபையும் சொல்லப்பட்ட பகிரங்கக் கூட்டுத்தாபனமும் உடன்பட்டுக் கொள்ளக்கூடியவாறான அத்தகைய நியதிகளின் மீதும், நிபந்தனைகளின் மீதும் (ஓய்வூதிய உரிமைகள் அல்லது சகாயநிதிய உரிமைகள் உட்பட) அதையொத்த சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(10) எட்டாம், (9) ஆம் உட்பிரிவுகளைப் பின்பற்றி நிலையத்தின் பணியாட்டொகுதிக்கு எவரேனும் ஆள் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினரைப்போன்று, அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அத்தகைய ஆள் அமைந்தவராதல் வேண்டும்.

86. (1) விதித்துரைக்கப்படுவதற்கு இப்பாகத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ள கருமங்கள் தொடர்பில் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்துக்குமுன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கிகாரமளிக்கப்படாத ஒழுங்குவிதியெதுவும், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியெதுவும் எத்தேதியன்று அவ்வாறு நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

87. (1) எக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்படுவதற்கு இப்பாகத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றில் எவையேனும் கருமங்கள் தொடர்பிலும் சபை விதிகளை ஆக்கலாம். சபையினால் ஆக்கப்படும் விதிகள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சபையினால் ஆக்கப்படும் விதியொன்று, அமைச்சரினால் அது அங்கீகாரமளிக்கப்பட்டு அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படும்வரை பயனுடையதாதலாகாது.

இப்பாகத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்புரையின் மீது செய்யப் படும் செயலுக் கான பாது காப்பு.

88. (அ) இப்பாகத்தின்கீழ் சபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப் பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட செயல் எதற்கும் சபைக்கெதிராக ; அல்லது

(ஆ) இப்பாகத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்புரையின்மீது, நிலையத்தின் உறுப்பினர் அல்லது ஊழியர் எவரினாலும் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப் பட்டதாகக் கொள்ளப்பட்ட செயல் எதற்கும் அவருக் கெதிராக,

தொடர்ச்சியொன்றோ அல்லது குற்றவழக்கொன்றோ எழுதலாகாது.

உரிமைக் கோரிக்கையைச் சபை இணக்கு தல்.

89. சபையானது, நிலையத்தின் நலன்களைக் கருத்திற்கொண்டு நியாய மானதெனக் கருதுமிடத்தும் அமைச்சரின் அங்கீகாரத்துடனும் எவரே னும் ஆளினால் சபைக்கெதிராகச் செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகள் எவற்றையும் அல்லது கோரிக்கை எதையும் அது போதியதெனக் கருதக் கூடிய அத்தகைய பணத்தொகைக்கு அல்லது வேறு நட்டஈட்டுக்கு இணக்கலாம்.

காணிகொள்ளற் சட்டத்தின்கீழ் நிலையத்துக்காக அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல்.

90. (1) நிலையத்தின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக் காக அசைவற்ற ஆதனம் எதுவும் கொள்ளப்படுவதற்குத் தேவைப்படு மிடத்து, அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் உத்தேசக் கொள்ளலை அங்கீகரிக்கலாம் என்பதுடன், அக்காணி எந்நோக்கத்துக் காகத் தேவைப்படுகின்றதோ அந்நோக்கமானது ஒரு பகிரங்க நோக்க மாகக் கருதப்படுதலும் வேண்டும். காணி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அதன்பின்னர் அத்தகைய அசைவற்ற ஆதனத் தைக் காணிகொள்ளற் சட்டத்தின்கீழ் கொள்ளலாம்.

(2) நிலையத்துக்காக காணிகொள்ளற் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனத்திற்காகச் செலுத்தப்படற்பாலதான பணத்தொகையெதுவும் நிலையத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

அரசின் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை நிலையத்துக்குக் கிடைக்கக்கூடிய தாக்குதல்.

91. (1) அமைச்சரின் வேண்டுகோளின் பேரில் காணி என்னும் விட யத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் நிலையத்தின் ஏதேனும் குறித் துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக அரசின் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் கசெற்றில் வெளியிடப் படும் கட்டளைமூலம் நிலையத்துக்குக் கைமாற்றி உரித்தாக்கலாம்.

(2) அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், (பணம் உட்பட) அரசின் அசைவுள்ள ஆதனம் எதனதும் உடைமையை யும் பயன்பாட்டையும் நிலையத்தின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக, நிலையத்திற்குக் கைமாற்றி உரித்தாக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தைப் பாதிப்பதான கட்டளையெதுவும், அத்தகைய ஆதனத்தின்மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பவரான அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி, அமைச்சரால் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்படுதலாகாது.

அட்டவணை

(48 ஆம் பிரிவு)

சபைக்குக் கைமாற்றப்பட்டு உரித்தாக்கப்படவுள்ள சிறுகைத்தொழில்கள் திணைக்களத்தின் பிரிவுகள்.

பின்வருவனவற்றிற்கான நிலையங்கள் :—

அரும் பொருட்கள்
விளையாட்டுப் பொருட்கள்
பிரப்பம் பொருட்கள்
மூங்கிற் பொருட்கள்
ஈர்க்கில் செய்பொருட்கள்
பாய் அருங்கலைகள்
சணற் புற் பொருட்கள்
தாழை நார் பொருட்கள்
பனம் பொருட்கள்
ஈச்சம் பொருட்கள்
முகமூடி செய்யும் அருங்கலைகள்
மரச் செதுக்கு அருங்கலைகள்
சிரட்டை செதுக்கு அருங்கலைகள்
இரேந்தை பின்னும் அருங்கலைகள்
தையல் அருங்கலைகள்
கிராமிய மட்பாண்ட அருங்கலைகள்
அரக்குவேலை அருங்கலைகள்
நாணற் புற் பொருட்கள்
பற்புல் செய்பொருட்கள்
விசிறி அருங்கலைகள்